# அல்லாஹ்வின் மலக்குகள்

பாடம் 6

அல்லாஹ்வின் படைப்புக்கள் ஏராளமாக உள்ளன. அவற்றுள் நாம் கண்ணால் பார்க்கக்கூடியவையும் உள்ளன; எமது கண்களுக்குத் தென்படாதவையும் உள்ளன. கண்களுக்குத் தென்படாத படைப்புக்களில் மலக்குகள் முக்கியமானவர்கள். அல்லாஹ் அவர்களை ஒளியினால் படைத்துள்ளான்.

மலக்குகள் மனிதர்களிலிருந்து வேறுபட்டவர்கள். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு எவ்விதத்திலும் மாறு செய்யமாட்டார்கள். மலக்குகளுக்கு தேவைகளோ வேறு ஆசைகளோ இல்லை.

மலக்குகளின் எண்ணிக்கையை அல்லாஹ் மாத்திரமே அறிவான். அவர்களில் பத்துப் பேர் முக்கியமானவர்கள். அவர்களை அறிந்து கொள்வோம்.

1. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்
2. மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம்
3. இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம்
4. இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம்
5. ரகீப் அலைஹிஸ்ஸலாம்
6. அதீத் அலைஹிஸ்ஸலாம்
7. முன்கர் அலைஹிஸ்ஸலாம்

8. நகீர் அலைஹிஸ்ஸலாம்

9. ரிழ்வான் அலைஹிஸ்ஸலாம்

10. மாலிக் அலைஹிஸ்ஸலாம்

பொதுவாக மலக்குகள் வானத்திலும் பூமியிலும் இருக்கின்றார்கள்; அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு நாம் மலக்குகளைப் பற்றி நம்பிக்கை கொள்ள வேண்டும்.

| |
|---|
| **மலக்குகளை நம்புவது முஸ்லிம்களாகிய எமது கடமையாகும்.** |

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. மலக்குகள் எதனால் படைக்கப்பட்டுள்ளனர்?
2. மலக்குகள் எங்கு இருக்கின்றனர்?
3. மலக்குகளில் முக்கியமானோர் எத்தனை பேர்?
4. மனிதர்களுக்கும் மலக்குகளுக்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் கூறுங்கள்.